# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1948/31 - 2016 ජනවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.07

*1948/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் முல்லைத்தீவு நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி குழாய்க் கிணறு இல. 04 இனை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, திசெம்பர் 29.*
*5/2/1/ 1166.*

**அட்டவணை**

*முல்லைத்தீவு மாவட்டத்தில் முஹுதுபடபத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. MUL- 101 வட்டப்பளை கிராம அலுவலர் பிரிவில் வட்டிப்பளை எனும் ஊரில் அமைந்துள்ள வட்டிப்பளை எனும் காணியிலிருந்து 0.0133 ஹெக்டயர் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு:-*

*வடக்கு : தனியார் காணி (உரிமையாளர் தெரியாது) ;*
*கிழக்கு : இக்காணியின் மீதித்துண்டு ;*
*தெற்கு : திரு. ஏ. எம். டபிள்யூ. டிங்கிரி பண்டா உரிமை கொண்டாடும் காணி ;*
*மேற்கு : வட்டப்பளையிலிருந்து ஏ34 வீதிக்கான நுழைவு வழியும் ஒதுக்கப்பட்ட வீதியும்.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 01. திரு. கே. சோதிநாதன் மற்றும் ஏனையோர்*
*தந்திரிட்டு,*
*முள்ளியவளை,*
*முல்லைத்தீவு.*

*1- 770*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கலிகமுவ நீர் வழங்கல் கருத்திட்டத்தில் அமைந்த கொப்பேவல நீர் சேகரிப்புத் தாங்கிக்கான நுழைவு வழியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/1/ 1148.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் கொப்பேவல கிராம அலுவலர் பிரிவில் கொப்பேவல ஊரில் அமைந்துள்ள கந்தஹேன எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 9.54 பேச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-

வடக்கு : அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. ஜீ. குலதுங்க அவர்களினால் அளக்கப்பட்ட திட்ட இல. 889 இல் அமைந்த காணித்துண்டு இல. 1 மற்றும் பாதை ;

கிழக்கு : அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. ஜீ. குலதுங்க அவர்களினால் அளக்கப்பட்ட திட்ட இல. 889 இல் அமைந்த காணித்துண்டு இல. 1 மற்றும் பாதை ;

தெற்கு : அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. ஜீ. குலதுங்க அவர்களினால் அளக்கப்பட்ட திட்ட இல. 889 இல் அமைந்த காணித்துண்டு இல. 5 மற்றும் பாதை.

மேற்கு : அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. ஜீ. குலதுங்க அவர்களினால் அளக்கப்பட்ட திட்ட இல.889 இல் அமைந்த காணித்துண்டு இல. 5 மற்றும் பாதை.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. எஸ். பீ. எஸ். என். குணசிங்க,
கிரிவந்தெனிய, கொப்பேவல.

1- 771

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கலிகமுவ நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் காரியாலய பொறுப்பதிகாரிகளிற்கான உத்தியோகபூர்வ காரியாலயம் நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/1/1139.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் பிசோவில கிராம அலுவலர் பிரிவில் பிசோவெல கிராமத்தில் அமைந்துள்ள பிபிலேகும்புர எனும் காணியின் மொத்த அளவில் இருந்து 25.72 பேர்ச்சஸ் கொண்ட பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-

வடக்கு : உரிமம்பெற்ற நிலஅளவை திட்ட இல. 691 இன் காணித்துண்டு இல. 3 இலுள்ள மீதித்துண்டு மற்றும் சபைக்கு சுவீகரிக்கப்பட்ட இடம் ;

கிழக்கு : கால்வாய் மற்றும் சபைக்கு சுவீகரிக்கப்பட்ட இடம் ;

தெற்கு : கனல் ;

மேற்கு : உரிமம்பெற்ற நிலஅளவை திட்ட இல. 691 இன் துண்டு இல. 3 இன் மிகுதித்துண்டு.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திருமதி ஆர். ஏ. சுமனாவதி,
இல. 37, பிசோவெல,
கலிகமுவ நகர்.

1- 772